DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

--

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.

வழக்கு எண்.	SC No.181/2022	அரசுத்தரப்பு	P.W.8
பெயர்	சீனிவாசன்	கிராமம்	
தந்தை / கணவர் பெயர்	தங்கவேல்	வட்டம்	
வயது		மாவட்டம்	

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.08.2025.

2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. 1வது எதிரி ஆஜராகாததை மன்னிக்க மனு கொடுக்கப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் புதுக்கோட்டை மாவட்டம் வ.உ.சி நகர் 6ம் வீதியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது வெல்டிங் வேலை செய்து வருகிறேன். நான் வேலைக்கு சென்று விட்டு திரும்பும் போது அம்மன் பழைய இரும்பு கடை எரிந்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னிடம் கடை எரிந்தது சம்மந்தமான வீடியோவை காட்டினார்கள். என் முன்பாக ஆஜர் எதிரியான மணிகண்டனை கைது செய்யவில்லை. ஆஜர் எதிரி என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய கேட்டுக்கொண்டதன்பேரில் அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

போலிசார் என்னை விசாரித்தபோது 19.08.2021 தேதி காலை 7 மணியளவில் நான் தெரிந்த நபரை பார்க்க புதுக்கோட்டை ரயில்வே ஸ்டேசன் வந்திருந்தேன் என்றும் அங்கு வந்திருந்த திருக்கோகர்ண காவல் ஆய்வாளர் எனக்கு அருகே நின்று கொண்டிருந்த ஒரு நபரை விசாரித்தார் என்றும் அப்போது அங்கு வந்த செல்லப்பன் மகன் அருண் என்பவரையும் என்னையும் சாட்சியாக இருக்க செய்து மணிகண்டன் என்ற சின்னமணியை போலிசார் கைது செய்து விசாரித்தபோது மணிகண்டன் என்ற சின்னமணி தானாக முன்வந்து

ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்பாகவும், அருண் என்பவர் முன்பாகவும் போலிசார் பதிவு செய்தார்கள் என்றும், அதற்கு நாங்கள் சாட்சியாக இருந்தோம் என்றும் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரிகளை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– சீனிவாசன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.